நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண்டலம், மதுரை
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திரு.மு. மதிமாறன், பி.இ.,

---

ந.க.எண். 6668/2019 மம 3 நாள்.03-2-2020

பொருள் : கட்டிடம் - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - மதுரை மண்டலம் - தேனி மாவட்டம், தேனி வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - தப்புக்குண்டு கிராமம் - சர்வே எண். 10/2, 11/1, 11/2 மற்றும் 11/4 -ல் உள்ள 60000.00 சமீ பரப்பளவுள்ள மனையிடத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமரின் PMAY-HFA-AHP அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய தப்புக்குண்டு திட்டப்பகுதியில் உத்தேச தரைத் தளம் + இரண்டு தளங்களுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1) வட்டார வளர்ச்சி அலுவலர், தேனி ஊராட்சி ஒன்றியம் கடிதம், நக.எண். 1128/2019/தி2 நாள். 26.04.2019 (இவ்வலுவலகத்தில் கடிதம் பெறப்பட்ட நாள். 3.12.2019)
2) நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின்கடிதம்,ந.க.எண்.930-B.M.1/Mdu/TPS/2019, நாள். 11.11.2019.
3) மாவட்ட ஆட்சித் தலைவர், தேனி மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை, நக.எண். 14466/2018/ஆ4, நாள். 22.05.2018.
4) அரசாணை எண்.138, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்.04.06.2004.
5) அரசாணை எண்(நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் முறை, நாள். 4.2.2019.
6) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2019/பிஏ2, நாள்.06.11.2019.
7) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.24.01.2020 (நன்னிலை வரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்த கோரியது)
8) நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரை அவர்களின் கடிதம், நக.எண். 905/TPS/TPK/2019, நாள். 29.01.2020. (நன்னிலை வரி, விளம்பரப் பலகை கட்டணம், மற்றும் கூராய்வுக் கட்டணம் செலுத்தப்பட்டது).

*****

Executive Engineer
TNSCB, Madurai Division

# வரைபட அங்கீகாரம் அளித்து உத்தரவு

தேனி ஊராட்சி ஒன்றியம் தப்புக்குண்டு ஊராட்சி மன்றத் தலைவர்

அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : S. பழனிராஜ்

எண் : 7/2019/2020 200 நாள் : 24.2.2020

பொருள் : வரைபடம் தேனி ஊராட்சி ஒன்றியம் தப்புக்குண்டு ஊராட்சி சர்வே / ~~வீட்டு எண்~~ 10/2, 11/1, 11/2, 11/4 கூடுதல் / புதிய வீடு கட்டிடம் / மராமத்து / கட்டுவதற்கு வரைபட - அங்கீகாரம் அளித்து உத்தரவிடல் தொடர்பாக

பார்வை 1) அரசு ஆணை எண் 256 நாள் 18.8.97

2) திரு ~~திருமதி~~ நிர்வாகப் பொறியாளர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மதுரைக்கோட்டம்

விண்ணப்ப நாள் : 18/2/2020

உத்தரவு

கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு தேனி ஊராட்சி ஒன்றியம் தப்புக்குண்டு ஊராட்சி தப்புக்குண்டு கிராமம் ______ வார்டு எண் ______ வீட்டு எண் 10/2, 11/1, 11/2, 11/4 சர்வே எண் காலியிடம் இடத்தில் 16308 சதுர மீட்டரில் கூடுதல் / புதிய வீடு / கட்டிடம் / கட்டிக்கொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது. பார்வையில் காணும் நபர் செலான் எண் நாள் மூலம் ரூ 81540/- செலுத்தியுள்ளார்.

1. இந்த அனுமதி 24-2-2020 காலத்திற்கு 23-2-2021 தேதி முடிய அமுலில் இருக்கும்
2. இத்துடன் அங்கீகாரம் செய்து அனுப்பப்பட்டிருக்கும் வரைபடத்தின்படி கட்டிடம் கட்ட வேண்டும். மேற்படி வரைபடம் சம்பந்தப்பட்ட இடத்தில் அலுவலர்கள் பார்வையிடும்படி தொங்கவிட வேண்டும்.
3. இப்போது கட்டபோகும் கட்டிடத்தில் வேறு எந்த விதமான அபிவிருத்தியோ அல்லது மாறுதலோ செய்து கட்ட வேண்டுமானால், அதற்குறிய சீர்திருத்தப்பட்ட வரைபடங்களுடன் ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்து உத்தரவு பெற்ற பிறகு தான் கட்டிடம் கட்ட வேண்டும்.
4. வாயிற்படிகள் வரை கதவு கைபிடிச்சுவர் லெதர் போட்டு பால்கனி முதலியவைகள் சொந்த இடத்திற்குட்பட்டு இருக்க வேண்டும். ஊராட்சி அல்லது அரசாங்க இடத்தில் யாதொரு விதமான ஆக்கிரமிப்புகள் செய்யக்கூடாது.
5. வரைபடத்தில் குறிப்பிட்டபடி சுகாதார முறையில் ஊராட்சியின் ஊழியர்கள் வருவதற்கு வசதியாக கழிப்பறை கட்டிக்கொள்ள வேண்டியது.
6. சமையலறை, குளியல் அறை முதலியவைகளுக்கு புகைபோக்கின் முதலியவைகள் போதியபடி அமைக்கவேண்டும்.
7. மேற்கூரைத் தண்ணீரை தகுதியான குழாய்கள் மூலம் ஊராட்சி வாறுகாலில் கொண்டு விடவேண்டும்.
8. சுகாதாரச் சட்டம் 20,35வது பிரிவின்படி ஊராட்சி மன்றம் தலைவரின் சான்றிதழ் வழங்கிய பின்பு தான் குடியேறவேண்டும்.
9. வேலை முடிந்த 15 நாட்களுக்குள் வேலை முடிந்த விபரத்தை தெரிவிக்க வேண்டும்.
10. குறிப்பிட்ட காலத்திற்குள் வேலை முடியாவிட்டால், காலாவதியாவதற்கு முன்பு உரிய கட்டணம் கட்டி மனுச்செய்து உத்தரவு வாங்கும் முன் எவ்விதமான வேலையும் செய்யக் கூடாது.
11. மழைநீர் சேகரிப்பு அமைப்பு கண்டிப்பாக அமைக்கப்பட வேண்டும்.
12. இந்த உத்தரவு 1 வருடத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும். கட்டிட கட்டுமானப் பணி நிலுவை இருக்கை மீண்டும் 1 வருடத்திற்கு அனுமதி பெறவேண்டும்.

இணைப்பு :

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்

பெறுநர் :

திரு / ~~திருமதி~~ நிர்வாகப் பொறியாளர் அவர்கள்
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
மதுரை கோட்டம், மதுரை

S. Palaniraj
24.2.2020
தலைவர் / President
Thappukundu Panchayat
ஊராட்சி மன்றம்
Theni Dt. Tamilnadu 625534